முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1037

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.08.2022, திங்கட்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்கார தவசியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது நள்ளி திங்கள்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 16 நாள், 01.08.2022 திங்கட்கிழமை)
அரங்கன் பலம் கூட எடுத்துரைப்பேன்
வாசி வென்ற ஞானியர்படை எல்லாம்
வலம்வந்து அரங்கன் அவதாரத்தை
3. அவதாரத்தை ஐயமற வெற்றிகொள்ளும் வண்ணம்
ஆற்றலாக துணை நின்று அருள்புரிய
அவனியிலே ஆறுமுகப்பெருமான் யானும்
அரங்கனோடு இரண்டற கலந்துள்ளேன்
4. உள்ளபடி அரங்கன் வழி வரும் உபதேசங்கள்
அனைத்தும் ஆறுமுகன் யான் தருகின்ற ஞானமாகும்
ஆகவே அரங்கன் சொல் செயல்வழி அகிலம் தர்மத்தை நிலைகொள்ள
மிகைபட சடுதி ஞான ஆட்சி மண்ணுலகம் கண்டு பாதுகாப்பை காண்கும்
5. காண்கவே அரங்கன் தருகின்ற
கண்டுரைப்பேன் சன்மார்க்க நெறிகளோடு
மேன்மை தரும் தர்ம வழிகளை
முன்மொழிந்து உலகோர் கடைபிடிக்க
6. கடைபிடிக்க உலகம் சடுதி
கடைத்தேறும் ஞான ஆட்சிக்காலமாக
தடையற அன்பர்கள் அரங்கன் வழி
தட்டாது ஏற்று தர்மபலம் கூட்டிட
7. கூட்டிட உலகம் அரங்கன் சூட்சும சக்தியோடு குறையில்லாத ஞான சக்தி லோகமாகி
இடரில்லா பாதுகாப்பும் சிறப்பும் இயற்கைவளமும் கண்டு உயர நேரும்
நேர்மைகொண்டு உலகோர் அரங்கன் வழி
நெருங்கி வர இந்த அற்புதம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–